**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)
(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109410

1. District மாவட்டம் : Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 05/2024 Date: நாள் 03.07.2024

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18.06.2024 at 12.00 hrs, 02.07.2024 at 12.00 hrs & Date to : நாள் வரை 03.07.2024 at 12.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.07.2024 Time : நேரம் 16.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.07.2024 Time : நேரம் 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Oral

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 50 Kms / South West
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.P.குருசாமி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.பரமசிவம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 01.08.1978 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் பெட்டிக்கடை வியாபாரம் (g) Address : முகவரி எண்.83, கோவிந்தன் நகர் காலணி, ஸ்ரீவில்லிபுத்தூர் டவுண், விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு.சந்திரசேகரன், உணவு பாதுகாப்பு அதிகாரி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- தாமதம் இல்லை -

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து அனுப்பப்படுகிறது.**

நான் இன்று 03.07.2024 மாலை 16.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் டவுண், கோவிந்தன் நகர் காலனி, கதவு எண்.83 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.பரமசிவம் (லேட்) என்பவரின் மகன் திரு.குருசாமி என்பவர் என் முன்பாக ஆஜராகி சொன்ன புகாரை மாலை 16.00 மணியிலிருந்து மாலை 17.00 மணிக்குள் அலுவலக கணினி மூலமாக தயார் செய்து, அந்த புகாரை பிரிண்ட் எடுத்து புகார்தாரரிடம் கொடுத்து, அதை படித்து பார்க்க சொன்னேன். அவர் அதை படித்து பார்த்துவிட்டு, அவர் சொன்னபடி சரியாக இருந்ததால், அந்த புகாரின் மூன்று பக்கங்களிலும் புகார்தாரர் திரு.குருசாமி தனது கையொப்பத்தை இட்டும், கைரேகை வைத்தும் அந்த புகாரை என்னிடம் வழங்கினார். மேற்படி புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர்

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. குருசாமி 3/7/24 (signature) — 03.07.2024 (signature)

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் K. RAMACHANDRAN ADSP / VACB / VNR (i/c)
Rank: நிலை ...................... No. எண் ..........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.07.2024 at 09.15 hrs.

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.05/2024 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 03.07.2024 இரவு 20.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.சந்திரசேகரன், உணவு பாதுகாப்பு அதிகாரி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2024 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். மேற்படி புகார் விபரம் பின்வருமாறு:- திரு.P.குருசாமி, 48/2024, த/பெ.பரமசிவம் (லேட்), கதவு எண்.83, கோவிந்தன் நகர் காலனி, ஸ்ரீவில்லிபுத்தூர் டவுண், விருதுநகர் மாவட்டம் என்பவர் இன்று 03.07.2024 மாலை 16.00 மணிக்கு என் முன்பாக ஆஜராகி சொன்ன புகார் விபரம் பின்வருமாறு:- நான் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் டவுண், கோவிந்தன் நகர் காலனியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 5ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். நான் ஸ்ரீவில்லிபுத்தூர் டவுண் நெசவாளர் காலனி தெருவின் ஓரத்தில் ஒரு சிறிய பெட்டிக்கடை வைத்து தொழில் செய்து, அதன் வருமானத்தின் மூலம் என் குடும்பத்தை நடத்தி வருகிறேன். எனக்கு ராஜாத்தி என்ற மனைவி இருக்கிறாள். கடந்த 18.06.2024 ஆம் தேதி நானும், என் மனைவியும் எங்களது மேற்படி பெட்டிக்கடையில் இருந்தபோது, மதியம் சுமார் 12.00 மணியளவில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் உணவு பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றி வரும் திரு.சந்திரசேகரன் என்பவரும், ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ராஜா என்பவரும் மற்றும் ஒரு காவலரும் எங்களது கடைக்கு வந்து உங்களது கடையில் அரசால் தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் காலாவதியான பொருட்கள் விற்பதாக எங்களுக்கு புகார் மனு வந்தது என்று எங்களிடம் கூறிவிட்டு, எங்களது பெட்டிக்கடைக்குள் சென்று சுமார் ½ மணி நேரம் சோதனை செய்தார்கள். அதன்பின்பு எங்களது பெட்டிக்கடையின் அருகிலிருந்த மேற்படி எங்களது வீட்டையும் சுமார் ½ மணி நேரம் சோதனை செய்தார்கள். சோதனையில் எங்களது கடையிலிலுருந்தோ, எங்களது வீட்டிலிருந்தோ யாதொரு தடை செய்யப்பட்ட பொருளோ, காலாவதியான பொருளோ கைப்பற்றப்படவில்லை. சோதனை முடித்து வெளியில் வந்த மேற்படி மூன்று பேர்களில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி உணவு பாதுகாப்பு அதிகாரி திரு.சந்திரசேகரன் என்பவர், என்னை மட்டும் தனியாக அழைத்து சென்று என்னிடம், நீ கடை நடத்துவதற்கு உணவு பாதுகாப்பு துறையில் லைசென்ஸ் வாங்கணும், ஆனா நீ லைசென்ஸ் வாங்காம கடை நடத்திட்டு இருக்க, அந்த லைசென்ஸ நான்தான் தரணும், அதனால நீ இன்றிலிருந்து மூன்று தினங்களுக்குள் ரூ.7,000/- பணத்தை கொண்டு வந்து கொடுத்தால் கடை நடத்த லைசென்ஸ் கொடுப்பேன் என்றும், இல்லையென்றால் இந்த பெட்டிக்கடையை நடத்தவிடாமல் செய்துவிடுவேன் என்றும் கூறி, அவர் வைத்திருந்த ஒரு துண்டு அட்டையில் 9486555406

உணவு பாதுகாப்பு அலுவலர் ஸ்ரீவி நகராட்சி என பச்சை (LTI of P.Gurusamy (sd) P.குருசாமி 3/7/24) மையினால் எழுதி கொடுத்துவிட்டு, அலுவலகத்திற்கு என்னை பார்க்க வரும்போது அலுவலகத்தில் நான் இல்லையென்றால் இதிலுள்ள போன் நம்பருக்கு போன் செய் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியாததால், நான் அவரை நேரில் போய் பார்க்கவில்லை. இதனிடையே நேற்று (02.07.2024) மதியம் சுமார் 12.00 மணியளவில் நானும், என்னுடைய மனைவி திருமதி.ராஜாத்தியும் கடையில் இருந்தபோது, மேற்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி உணவு பாதுகாப்பு அதிகாரி திரு.சந்திரசேகரன் என்பவர் வந்து, என்னிடம் என்னாச்சு நான் கேட்ட ரூ.7,000/- பணம் என்றும், ஏன் நீ வந்து இன்னும் என்னை பார்க்கல, ஒழுங்கா நாளைக்கு காலைல பணத்துடன் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து பாரு என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன்பேரில் நான் இன்று (03.07.2024) மதியம் சுமார் 12.00 மணியளவில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்திற்குள் இருக்கும் உணவு பாதுகாப்பு அதிகாரி திரு.சந்திரசேகரன் என்பவரின் அலுவலகத்திற்கு சென்று அவரை பார்த்தேன். அப்போது அவர் என்னிடம், என்னப்பா நான் கேட்ட ரூ.7,000/- பணம் கொண்டு வந்திருக்கியா என்று கேட்டார். அப்போது நான் அவரிடம், அய்யா நான் சிறிய பெட்டிக்கடைதான் நடத்தி வருகிறேன், அதுக்கு லைசென்ஸ் வாங்க ரூ.7,000/-மா அய்யா என்று கேட்டேன். அதற்கு அவர் லைசென்ஸ் வழங்குவதற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் வருடத்திற்கு 100 ரூபாய்தான் என்றும், நீயேதான் விண்ணப்பத்தை ஆன்லைன்ல விண்ணப்பிச்சு, நீயேதான் ரூபாயவும் ஆன்லைன்ல கட்டணும், இருந்தாலும் என்னை பார்க்காம நீயே ஆன்லைன்ல விண்ணப்பத்தை விண்ணப்பிக்க முடியாது, ரூபாயவும் ஆன்லைன்ல கட்ட முடியாது, லைசென்ஸ நான் சும்மா தர முடியாதுல என்று கூறி, நீ ரூ.3,000/- பணத்தை ரெடி பண்ணி கொண்டு என்னுடைய அலுவலகத்திற்கு வந்து என்னைப் பார்த்து கொடு என்று கூறினார். அப்போது நான் அவரிடம், அவ்வளவு பணம் என்னால புரட்ட முடியாதுய்யா, நானே 100 ரூபாய ஆன்லைன்ல விண்ணப்பிச்சு கட்டிக்கிறேன், அப்புறமா நீங்க பார்த்து லைசென்ஸ் மட்டும் எனக்கு கொடுத்திருங்கய்யா என்று சொன்னேன். அதற்கு அவர், ரூ.1,500/- பணத்தையாவது ரெடி பண்ணி கொண்டு என்னுடைய அலுவலகத்திற்கு நாளை காலை வந்து என்னை பார்த்து என்கிட்ட கொடுத்தாத்தான், நீ நடத்துற பெட்டிக்கடைய பிரச்சனையில்லாம நடத்த முடியும் (LTI of P.Gurusamy (sd) P.குருசாமி 3/7/24) என்றும், இல்லையென்றால் நீ நடத்தும் பெட்டிக்கடையை நடத்தவிடாமல் செய்துவிடுவேன் என்றும் கரராக கூறினார். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இருந்தாலும் அவரிடம் அப்போது சரியென்று சொல்லிவிட்டு கடைக்கு வந்து, கடையிலிருந்த என் மனைவியிடம் இதை தெரிவித்தேன். அப்போது அவரும் அவருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததை தெரிவித்து, லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுங்க என்று சொன்னார். ஆகையால் என்னிடம் நான் நடத்துற பெட்டிக்கடைக்கு நான்

ஆன்லைன்ல விண்ணப்பச்சு பணத்தை கட்டின பிறகு என்கடைக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு என்னிடம் லஞ்சமாக ரூ.1,500/- பணம் கேட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி உணவு பாதுகாப்பு அதிகாரி திரு.சந்திரசேகரன் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த புகார் வாக்குமூலம் கொடுக்கும்போது உணவு பாதுகாப்பு அதிகாரி திரு.சந்திரசேகரன் என்பவர், அவர் கைப்பட அவரது அலைபேசி எண் மற்றும் பதவி ஆகியவற்றை கடந்த 18.06.2024 ஆம் தேதி பச்சை நிற மையினால் எழுதி என்னிடம் கொடுத்த மேலே சொன்ன துண்டு அட்டையை கொடுத்தேன். படித்துப் பார்த்தேன். நான் சொன்னபடி சரியாக உள்ளது. (LTI of P.Gurusamy (sd) P.குருசாமி 3/7/24) Sir, The above complainant Tr.P.Gurusamy was appeared before me on 03.07.2024 at 16.00 hrs and recorded his oral complaint between 16.00 hrs and 17.00 hrs through computer by me. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.05/2024 u/s. 7 of the P.C. Act-1988 as amended in 2018 on 03.07.2024 at 20.00 hrs and took up for investigation. (Sd) (K.Ramachandran) 03.07.2024 (K.RAMACHANDRAN) ADSP/V&AC/VNR (OD).

The original FIR along with original complaint and a small card it contains mobile number and designation of the accused are submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

03.07.2024
(K.RAMACHANDRAN)
ADSP/V&AC/VNR(OD).